**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உத்திரமேரூர்.**

**முன்னிலை: Ms. R. கிருத்தியா,B.A., LL.B.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் நாள் புதன்கிழமை

**இடைக்கால மனு எண். 1 /2026**

**in**

**அசல் வழக்கு எண். 13 / 2022**

1. அமலநாதன்
2. சாந்தி
3. பிரான்சிஸ்
4. அந்தோணி
5. ஜார்ஜ்
6. பன்னீர்செல்வம்
7. சுமன்
8. சூர்யா
9. ராணி

:: மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**/எதிர்/**

சகாயராஜ் :: எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 02.04.2026-ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. அன்பழகன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு. K.சண்முகசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் நான்கு பக்க எல்லைகள் மற்றும் அளவுகளையும் மற்றும் இயற்கை அமைப்புகளை

பார்வையிட்டு நிலஅளவையர் உதவியுடன் தாவா சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஆணையரை நியமிக்க வேண்டும் என உத்தரவு வழங்கக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:**

மனு சொத்தானது ஆதியில் நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டு மனுதாரர்கள் ஆண்டு அனுபவித்து வீடு கட்டி அவற்றில் மனுதாரர்கள் வசித்து வருவதாகவும், மனுதாரர்களுக்கு சென்று வர வழிபாதையாக சர்வே எண். 566/42 வருவாய் துறையால் ஒதுக்கப்பட்டு இன்று வரை பயன்படுத்தி வருவதாகவும், சர்வே எண். 566/44 பூரா விஸ்தீரணம் 0.070 மட்டும் எதிர்மனுதாரரின் கிரையதாரர் லூர்தம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் பயன்படுத்தி வருகின்ற புதிய சர்வே எண். 566/42 எதிர்மனுதாரர் தன்னுடைய இடம் என்றும், அதன் வழியாக யாரம் செல்லக்கூடாது என்றும் பல இடையூறுகளை செய்து வருவதாகவும், எனவே மனுதாரர்களின் அனுபவத்தையும் உரிமை மூலத்தை நிரூபிக்கவும், மனுதாரர் பயன்படுத்தி வருகின்ற வழிப்பாதையை நிரூபிக்க ஒரு நீதிமன்ற ஆணையரை நியமித்து மனு சொத்தை அளந்து மனுதாரரின் அனுபவத்தை நிரூபிக்க இம்மனுவை அனுமதிக்க வேண்டி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்மனுவின் சுருக்கம்**

மனுதாரர் மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுவில் ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர அனைத்து சங்கதிகளையும் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மனுதாரரையே

சாரும். மனுதாரர் உரிய ஆவணங்கள், வாய்மொழி சாட்சியம் மூலம் மற்றும் வருவாய் துறை ஆவணங்களை கொண்டு எதிர்மனுதாரர் தாவா சொத்தின் அனுபவத்தை நிரூபிக்க வேண்டுமே தவிர நீதிமன்ற ஆணையர் மூலம் சாட்சியம் சேகரிக்க மனுதாரர் முயல்கிறார். உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் ஆணையர் நியமனம் கோர மனுதாரருக்கு உரிமையில்லை. மேலும் தாவா சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்பதற்கான சாட்சியத்தை சேகரிப்பதற்காக நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய கூற்று என்னவென்றால் மனுதாரர்கள் கோரியவாறு இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

**இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. பரிசீலிக்கப்பட்டது.**

**4) தீர்வு**

எதிர்மனுதாரர் இவ்வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுசொத்தில் மனுதாரர்களே அனுபவம் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரர் பொய்யாக இவ்வழக்கினை மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்து வழிப்பாதையாக மனுதாரர்களின் அனுபவத்தில் இருப்பதை நிரூபிக்க வழக்கறிஞர் ஆணையரை நியமித்து சர்வே எண்களை அடையாளப்படுத்தி எந்த சர்வே எண்ணில் எந்த சொத்து உள்ளது என அடையாளம் காட்ட தாவா சொத்தினை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து மனுதாரர் சொத்தின்

அனுபவத்தையும், உரிமையையும் நிரூபிக்க மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்று வாதிடப்பட்டு வருகிறது.

எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கினை காலதாமதம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனுவினை வைத்து மனுதாரர் சாட்சியம் சேகரிக்ககூடும் என்றும் எனவே மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டு வருகிறது.

வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொறுத்த வரை அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கவேண்டிய அவசியமில்லை என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய 2016 (3) MWN (Civil) 527 வழிகாட்டுதல் இம்மனுவிற்காக பொருந்துவதாக உள்ளது. மேலும் வழக்கானது 1ம் வாதி குறுக்கு விசாரணையில் உள்ள நிலையில் இம்மனுவானது சாட்சியம் சேகரிக்கும் பட்சம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையை வைத்து சாட்சியம் சேகரித்து தனது வழக்கை நிரூபணம் செய்யப் பயன்படுத்தக் கூடாது என்பது தெளிவான கூற்றாகும்.

மேலும் தாவா சொத்தில் மனுதாரரின் அனுபவத்தை காட்ட எந்தவிதமான வருவாய்துறை ஆவணங்களோ, வாய்மொழி சாட்சியத்தின் மூலமோ மனுதாரர் தரப்பில் நிரூபிக்கவில்லை. மேலும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரும் வழக்கில் இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. மேலும் இம்மனுவை அனுமதித்தால் இம்மனுவை

வைத்து மனுதாரர் சாட்சியம் சேகரிக்க கூடும் என்பதாலும், பிரதிவாதிகள்/மனுதாரர்கள் தன் வழக்கின் மூலத்தை நிரூபிக்க வேண்டும் வாதியின் பலவீனத்தை நாடக்கூடாது என்பதாலும் இம்மனுவை நிராகரிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**5) முடிவாக**

மேற்கூறிய காரணங்களுக்காக மனுதாரர்கள் கோரிய இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இம்மனுவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 15-04-2026-ம் தேதியில் அவையறிய பகரப்பட்டது.

R KRITYA

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.04.15 16:48:17 +0530

*மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,*
*உத்திரமேரூர்.*

<u>**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.**</u>

R KRITYA

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by R KRITYA
Location: UTHIRAMERUR
Date: 2026.04.15 16:48:23 +0530

*மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,*
*உத்திரமேரூர்.*